செ.வெ.எண். 6/பிப்ரவரி தேதி : 05.02.2016

# பத்திரிக்கை செய்தி.

## அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் (ITI) கடகத்தூர் தருமபுரியில்

## குறுகிய கால தையல் பயிற்சி நடைபெறுகிறது

தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பில் தருமபுரி அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் குறுகியகால தையல் மற்றும் நிட்டிங் பயிற்சி இலவசமாக அளிக்கப்பட உள்ளது. இந்த குறுகிய கால பயிற்சி அனைத்து தரப்பு மக்களும் சேர்ந்து பயன் பெறும் வகையில் 40 இடங்களில் சேர்க்கை வருகிற 08.02.2016 முதல் 15.02.2016 வரை நடைபெற உள்ளது.

விருப்பம் உள்ள 14 வயது முதல் 40 வயதுக்குட்பட்ட பள்ளி படிப்பை முடித்தவர்கள், பள்ளி படிப்பை பாதியில் நிறுத்தியவர்கள், வேலை தேடும் இளைஞர்கள் மற்றும் மகளிர் ஆகிய அனைவரும் காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை நடைபெறும் 3 மாத கால பயிற்சியில் சேர்ந்து பயன்பெறலாம். பயிற்சி முடித்த அனைவருக்கும் நிறுவனங்களில் உடனடியாக வேலைவாய்ப்பு கிடைக்கும். பயிற்சி முடிவில் தமிழக அரசின் சான்றிதழ் வழங்கப்படும். இந்த பயிற்சியில் சேர குறைந்தபட்ச கல்வி தகுதி 8ம் வகுப்பு தேர்ச்சி ஆகும். விண்ணப்ப கட்டணமாக ரூ.50/-ம் சேர்க்கை கட்டணமாக ரூ.100/-ம் செலுத்த வேண்டும். தகுதி மற்றும் விருப்பம் உள்ளவர்கள் தங்கள் அசல் கல்வி சான்றிதழ்கள் மற்றும் ஒரு நகலுடன் 08.02.2016 முதல் 15.02.2016 வரை அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் (கடகத்தூர்) தருமபுரியில் பயிற்சியில் சேர்ந்து பயன்பெற தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்.04348-235323 என முதல்வர் எ.வி. ஜெகனாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.